கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு 2009/2010
(ஏப்ரல்/மே - 2015) (வெளிவாரி)

# HC 201 இந்தியாவில் இந்து நாகரிகத்தின் விருத்தி

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

01. "இந்தியாவின் இந்து நாகரிக வரலாற்றில் மொஹஞ்சதாரோ ஹரப்பா கலாசாரம் கவனத்திற்குரிய பல விடயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினைப் பரிசீலனை செய்க.

02. தமிழக வரலாற்றில் கி.பி. 1 - கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் நிலவிய முருக வழிபாட்டின் சிறப்பினை ஆராய்க.

03. வட இந்திய இந்துசமய வரலாற்றில் குப்தர்காலம் பெறுகின்ற முக்கியத்துவத்தினை மேல்வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க.
    (அ) இலக்கியங்கள்
    (ஆ) நாணயங்கள்
    (இ) கோயில்களும் கலைகளும்

04. தமிழக வரலாற்றில் பல்லவர்காலம் "பக்திநெறிக்காலம்" என அழைக்கப்படுவதற்கான காரணங்களைத் தகுந்த ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துக.

05. சோழர்கால இந்துசமய நிலை தொடர்பாக மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

    (அ) இராஜராஜ சோழனின் சமயப்பணிகள்
    (ஆ) தஞ்சைப்பெருங்கோயிற் கட்டுமானங்கள்

06. "தென்னாட்டு இந்துப்பண்பாட்டு வரலாற்றில் விஜயநகரப்பெருமன்னர் காலமும் ஒரு வகையில் பொற்காலமேயாகும்." இக்கூற்றினைப் பரிசீலனை செய்க.

07. "இந்து சமயமானது இந்தியாவுக்கு மட்டும் உரித்துடையதன்றி உலகத்தவர் யாவரையும் தன்னகத்தே ஈர்த்துக்கொள்கின்ற ஒரு சமயமாகக் கணிக்கப்படுகிறது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

08. எவையேனும் நான்கினுக்கு விளக்கக் குறிப்புக்கள் எழுதுக.

(அ) திருமுறைகளில் இராவணன்
(ஆ) பெரியாழ்வார்
(இ) சித்தர்களின் சமூகச்சிந்தனைகள்
(ஈ) காரைக்காலம்மையார்
(உ) கங்கைகொண்ட சோழேஸ்வரம்
(ஊ) மகேந்திரவர்மன்